LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கலைமாணித்தேர்வு 2010/2011

(ஜனவரி/பெப்ரவரி 2013)

PSS – 4104 நிர்வாகச் சட்டங்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி 1ல் மூன்று வினாக்களையும், பகுதி 11ல் ஒரு வினாவையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடைதருக.

---

பகுதி -1

01.(a) "தேசிய அரசுகள் சமூகநல அரசுகளாகத் தோற்றம் பெற்றமையின் விளைவே நிருவாகச்சட்டத்தின் அவசியத்தை வலுப்படுத்தியது" விளக்கம் தருக.

(13 புள்ளிகள்)

(b) நிறைவேற்றுனர் நிருவாகிகளுக்கு பாராளுமன்றச் சட்டங்களினாலும், துணைநிலைச் சட்டங்களினாலும் வழங்கப்படும் தன்மதி (Discretionary power) அதிகாரத்தின் பிரயோகத்தினை நிருவாகச்சட்டம் எவ்வாறு அவதானிக்கின்றது? விளக்குக.

(12 புள்ளிகள்)

02.(a) பொது அலுவலர்கள் சார்பாக தாபனக்கோவையில் இடம்பெற்றுள்ள ஏற்பாடுகள் (Establishment code) யாவை?

(9 புள்ளிகள்)

(b) பொதுக்கூட்டுத்தாபனங்களின் மீது மத்தியரசு எத்தகைய கட்டுப்பாடுகளைக் (Public Corporation) கொண்டுள்ளது.

(8 புள்ளிகள்)

(c) கவியஸ் கோர்ப்பஸ் (Habeas corpus writ) எத்தகைய சந்தர்ப்பங்களில் கோரத்தக்கது.

(8 புள்ளிகள்)

03.(a) கையளிக்கப்பட்ட சட்டவாக்கம் (Deligated Legistation) என்பதிலிருந்து நீர் யாது விளங்கிக்கொள்கின்றீர்? (8 புள்ளிகள்)

(b) “கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்தின் வகைகள் வேறு வேறானபோதிலும் அவற்றின் விளைதிறன் ஒன்றேயாகும்” இக்கூற்றை மதிப்பிடுக.

(8 புள்ளிகள்)

(c) இச்சட்டவாக்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் கருத்துக்களையும் இச்சட்டவாக்கத்தை வலியுறுத்தும் ஏதுக்களையும் விளக்குக.

(9 புள்ளிகள்)

04. நிறைவேற்றுனர்களோ அல்லது நிர்வாகிகளோ நியதிச்சட்ட அதிகாரத்தையோ அல்லது கையளிக்கப்பட்ட சட்டவாக்க அதிகாரத்தையோ பிரயோகிக்கும்போது அவ்வதிகாரத்தின் பிரயோகம் இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு (Principle of Natural Justice) அமைவானதாக உள்ளதா என்பதை நீதிமன்றங்கள் அவதானிக்கின்றன. இந்த அடிப்படையில் இயற்கை நியதிக்கோட்பாட்டின் இரு கிளைகள் நீதிமன்றத்தை வழிப்படுத்துகின்றன. அவை,

(1) இருபக்கமும் கேள் என்ற விதி (Audi Alteram Partarm) (13 புள்ளிகள்)

(11) பக்கச்சார்பாக இருத்தல் ஆகாது (Nemo Judex in sua causa)

(12 புள்ளிகள்)

இவ்விரு கிளைகளினதும் பிரயோகத்தை தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக்கொண்டு அவதானிப்புச் செய்க.

## பகுதி – 11

05. “மரபுவழி நீதிமன்றங்களினால் நிருவாகச்சட்டம் பிரயோகிக்கப்படுவதிலும் பார்க்க நிர்வாக நீதிமன்றங்களினால் இச்சட்டம் பிரயோகிக்கப்படுவது காலத்தின் தேவையாகவுள்ளது” என்பது நியாயமான கருத்தாகுமா? இவ்வாதத்தை விமர்சிக்குக.

(25 புள்ளிகள்)

06. மருவிய நீதியதிகாரம் (Quasi-Judicial Power) என்பதன் கருத்து யாது? நீதியதிகாரத்திலிருந்து மருவிய நீதியதிகாரம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை ஆராய்க.

(25 புள்ளிகள்)